# இதயா மகளிர் கல்லூரி
# கும்பகோணம்

| | | |
|---|---|---|
| வகுப்பு | : | முதுகலை இரண்டாமாண்டு |
| பருவம் | : | நான்காம் பருவம். |
| பாடம் | : | இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும். |
| பாடக்குறியீடு | : | **P16TA41** |
| பேராசிரியர் | : | முனைவர் ச. சாந்திமதி |

உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வுத் துறை,
இதயா மகளிர் கல்லூரி,
கும்பகோணம் - 612 001

Scanned with CamScanner

# இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும்

## நாடகம் விளக்கம்

- நாடகம் என்ற அடிச்சொல் நடி என்பதாகும்.
- நடித்தல் என்பது தொழிற்பெயர்.
- நாடகமாவது கதை தழுவிய கூத்தாகும்.
- காவியத்தைப் போல் ஒரு கதையைச் சொல்ல வேண்டும்
- நடிப்பின் மூலம் புலப்படுத்த வேண்டும்.
- உரையாடலுக்கேற்ற வசன அமைப்பைப் பெற்றுள்ளது.

## நாடக வகைகள்

நாடகங்களில் முதன்மைப் பிரிவாக மூன்றைச் சொல்லலாம்

1. படிப்பதற்குறியது.
2. நடிப்பதற்குறியது.
3. படிப்பதற்கும் நடிப்பதற்கும் உரியது.

பாரதிதாசனின் பிசிராந்தையார் பாவலர் பாசுந்தரம் அவர்களின் புலவருள்ளம் படித்தும் மகிழலாம்.

பிறர் பாடி நடிக்கும் போதுதான் அவற்றின் நன்மையைக் காண முடியும்.

செய்யுள் நாடகம், கவிதை நாடகம், உரைநடை நாடகம்.

## நாடகக் கூறுகள்

நாடக்க கூறுகள் என்பனவற்றை நாடகத்தின் உறுப்புகள் எனக் கூறலாம். முக்கிய உறுப்புகள் நாடகத்தில் இடம்பெறும்.

1. கதைக்கோப்பு,
2. கதைத்திட்டம்
3. பாத்திரங்கள்
4. உரையாடல்
5. பின்புலம்

## கதைக்கோப்பு

இதனைக்

- கதைக்கரு
- கதைத்திட்டம் என்பர்.

கதையை முறைப்படுத்தி அமைக்கும் பாணியாகும்

நாடகத்தை முறையாக வளர்த்துச் செல்வதாகும்.

## நாடகப் பாத்திரங்கள்

- நாவலிலும் , நாடகத்திலும் பாத்திரங்கள் இன்றியமையாததாகும்

Scanned with CamScanner

- நாடகத்தில் வரும் பாத்திரத்திற்கும் நாவலில் வரும் பாத்திரத்திற்கும் வேறுபாடு உண்டு.
- ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் கதைப் பாத்திரங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.
- வாசகர்களின் கவனத்தை பாத்திரங்கள் ஈர்த்துவிட முடியும்.
- பாத்திரங்கள் இயல்பான முறையில் அமைந்தால்தான் உண்மையான பாத்திரங்களாகின்றன.

## உரையாடல்

- உரையாடல் என்பது பாத்திரங்களுக்கிடையே நடைபெறும் பேச்சு, தொடர்ச்சியான பாத்திரங்களின் பெரும்பகுதிகள் நாடகங்களின் உரையாடல் மூலம்தான் காட்ட முடியும்.
- பாத்திரத்தன்மையை உளவியல் அடிப்படையில் புரிந்துக் கொண்டு அதற்கேற்றாற் போல்
- உரையாடலை அமைப்பதே சிறப்பானதாகும்.
- உரையாடலுக்கும் ஒலிக்குறிப்பிற்கும் தொடர்புண்டு.

## பின்புலம், பின்னணி

பின்புலம் எல்லா இலக்கியக் வகைகளிலும் உண்டு. கவிதை, செய்யுள், நாவல், சிறுகதை போலவே நாடகத்திலும் இடம்பெறுகிறது.

## நாடக அமைப்பு

❖ நாடக அமைப்பு என்பது ஒன்றற்கு இயல்பாகத் தேவைப்படும் பகுதிகளின் கூட்டு ஆகும். நாடகம் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை.

1. தொடக்கம்
2. வளர்ச்சி
3. உச்சநிலை
4. வீழ்ச்சி
5. முடிவு

## நாடகம், நாவல் வேறுபாடு

- நாடகம், கவிதை, உரைநடை, செய்யுள், இசை முதலிய வடிவங்களில் அமையக் கூடியது.
- நாவல் உரைநடையால் ஆனது.
- நாடகம் அரங்கத்தில் நடிக்கப் பெறும்.
- அங்க அசைவுகள் ஒலிக்குறிப்புகள் மூலம் வாசகர்க்கும் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன.
- நாடக நிகழ்வுகளை மெய்ப்பாடுகள் மூலம் அறியலாம்
- நாவல் நம் கையில் இருப்பதாகும்.
- நாவல் மவுன வாசிப்பாகத்தான் இருக்கும்.

Scanned with CamScanner

- நாடகத்தில் பலர் இணைந்து செயல்படுகின்றனர்
- ஆனால் நாவலில் கதையாசிரியர் மட்டுமே தனித்தியங்குகிறார்.

## உரைநடையின் வகைகள்.

வல்லிக்கண்ணன் கூற்றுப்படி தமிழில் பல வகையான உரைநடைப் போக்குகள் காணப்படுகின்றன.

1. விளக்க உரைநடை

   ஒரு செய்தியை பற்றி விளக்கமாக எழுதுவதும், பேசுவதும் விளக்க உரைநடையாகும்.

2. அளவை உரைநடை

   அளவை என்பது லாஜிக் எனக் கூறுவர். ஒரு கருத்தை சொல்லும் போது அதன் கண் விவாதங்களை எழுப்பி அமைப்பது அளவை உரைநடையாகும்.

3. வருணனை உரைநடை

   தான் அனுபவித்த ஒன்றை வரிசை மாறாமல் அதன் உட்கூறுகளை எல்லாம் பிரித்து பிரித்து கூறுவதை வருணனை உரைநடை எனலாம்.

4. நாடக உரைநடை

   நாடகத்தில் பாத்திரங்கள் உரையாடிக் கொள்வது போல அமையும்.

5. பொதுநடை

   பொதுநடை மொழிபேசுவது எல்லோருக்கும் உரியது. இயல்பாக எழுதும் நடையாகும்.

## நாவல்

- நாவல் புதுமை என்னும் பொருளைத் தருவதாகும். இது இத்தாலிய மொழிச்சொல்லாகும்.
- நாவல் உருவாக்கத்திற்கு இடம்பெறுவதாகும்.

## கதைப்பின்னல்

- கதைப்பின்னல்
- கதைக் கட்டுக்கோப்பு
- கதைத்திட்டம்
- கதைக்கோப்பு

ஆகியன ஒரு பொருளைத் தருவதாகும்.

மு.வ.கதைக்கரு என்று கூறுவார்.

கதையின் நிகழ்ச்சிக் கூறு, மறைசதி என்னும் பொருள் உண்டு.

## நாவல் கதைப் பின்னலின் வகைகள்

இருவகையாகக் கூறலாம்.

1. நெகிழ்ச்சிப் பின்னல்
2. செறிவுப் பின்னல்

## நெகிழ்ச்சிப் பின்னல்

கதைப் பின்னல்கள் காரணகாரிய முறைப்படி அமையாமல் இடையறவுப்பட்டு நிகழ்ச்சிகள் அமைவது நெகிழ்ச்சிப் பின்னலாகும்.

Scanned with CamScanner

## செறிவுப் பின்னல்

- செறிவுப் பின்னலில் கதை தொடர்ச்சியாக அமையும்.
- ஏதேனும் ஒரு பகுதி கிளைத்து வெடித்தது போன்று அமையும்.

## நோக்குநிலை

ஒரு கதையை யாருடைய பார்வையின் மூலம் கதையாசிரியர் வெளிப்படுத்துகிறார் என்பதுதான் நோக்கு நிலையாகும்.
நோக்குநிலைகள் பல வகைகளில் அமைகின்றது.

1. ஆசிரியர்தான் முழுவதும் அறிந்த நிலையில் அவரே கூறுதல்
2. நாடக நிலையில் வைத்து பாத்திரங்களின் உரையாடல் வழிக் கூறுதல்
3. பாத்திரங்களை பாராட்டி எழுதுதல்
4. ஆசிரியர் பாத்திரங்களாகவே மாறிக் கூறுதல்.

## சிறுகதை நாவல் வேறுபாடு

- நாவல் நீண்ட வடிவம் கொண்டது.
- பழங்கால மரபை ஒட்டி வந்தது.
- நீண்டநேரம் கதைக் கேட்கும் அமைதிச் சூழலில் தோன்றியது.
- சிறுகதை குறுகியது.
- தற்காலிக சிறு மருந்தாக அமைவது.
- சிறுகதை வாழ்வின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துரைக்கிறது.
- பல்வேறு பிரச்சனைகளை வெளிப்படுத்தி அமைகிறது.

## மரபுக்கவிதை

- தமிழ் மரபுக் கவிதைகள் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமை உடையது.
- சங்ககால கவிதைகள் இலக்கிய வரையறைக்கு உட்பட்டது.
- தொல்காப்பியம் இந்த இலக்கியங்களுக்கு உரிய யாப்பு இலக்கணத்திற்கு
  உரியதாகும்.
- பாரதியார் பாடிய ஏனையவற்றுள்ளும் பெண்கள் குறித்துப் பாடியவை வியக்கத்தக்கன.
- ஆணும் பெண்ணும் நிகரென கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்.

## வாய்மொழி இலக்கியம்

வாய்மொழி இலக்கியம் நாட்டுப்புற பாடலாகும். இதனை கதைப்பொதி பாடல் என்றும் கூறலாம்.

- நடை
- பொருள்
- வடிவம்

ஆகியவை மக்களுக்கு புரியும் வண்ணம் அமைந்திருக்கும்.

Scanned with CamScanner

## படிக்க வேண்டிய வினாக்கள்

1. இலக்கியத் தோற்றத்திற்கான காரணங்களை விளக்குக.
2. இலக்கியக் கொள்கை - விளக்கம் தருக.
3. அழகியல் கொள்கை என்றால் என்ன?
4. திறனாய்வுகளின் வகைகளைக் கூறுக.
5. கருத்து விளக்கக் கற்பனை என்றால் என்ன?
6. இலக்கியத்தின் அடிப்படைக் கூறுகளை விளக்குக.
7. காப்பியத்தின் வகைகளைக் கூறுக.
8. பக்தி இலக்கியக் கொள்கைகளை வரையறை செய்க.
9. நாடக வகைகளைக் கூறுக.
10. நாடகக் கூறுகளை எழுதுக.
11. நாடகம் - நாவல் வேறுபாடுகளை எழுதுக.
12. உரைநடையின் வகைகளைக் கூறுக.
13. நாவல் கதைப்பின்னலின் வகைகளைக் கூறுக.
14. நோக்குநிலை என்றால் என்ன?
15. சிறுகதையும் நாவலும் வேறுபாடு தருக.

Scanned with CamScanner